# யா/ தோப்பு அருள்நந்தி வித்தியாலயம்

# பரிசுத்தினம்

காலம் :- 27.10.2016 வியாழக்கிழமை

நேரம் :- பி.ப 3.00 மணி

இடம் :- பாடசாலை மண்டபம்

## தலைவர்

திருமு.ராஜவரோதயம்
(பாடசாலை முதல்வர்)

## பிரதம விருந்தினர்

திரு.ந.தெய்வேந்திரராஜா
(வலயக் கல்விப்பணிப்பாளர், யாழ் வலயம்)

## சிறப்பு விருந்தினர்கள்

வைத்தியகலாநிதி லயன் சி.இராஜலிங்கம் (J.P)
(ஓய்வுபெற்ற வைத்திய பொறுப்பதிகாரி,
அச்சுவேலி அரசினர் வைத்தியசாலை)

திரு.வே.பாலசுப்பிரமணியம்
(ஓய்வு பெற்ற பிரதிக்கல்விப் பணிப்பாளர்)

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

அதிபர், ஆசியர்கள்,
மாணவர்கள், SDS, SDC

## அதிபர் அறிக்கை

எல்லாம் வல்ல இறைவனை மனதிலே வேண்டி இப்பரிசுத்தின நிகழ்வில் அதிபர் அறிக்கையை சமர்ப்பிக்கின்றேன். இன்றைய நிகழ்வின் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டிருக்கும் யாழ் வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.ந.தெய்வேந்திரராஜா அவர்களே! மற்றும் இன்றைய நாளில் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டிருக்கும் அகில இலங்கை சமாதான நீதவானும் அச்சுவேலி அரசினர் வைத்தியசாலையின் ஓய்வு பெற்ற வைத்திய பொறுப்பதிகாரி வைத்திய கலாநிதி லயன் சி.இராஜலிங்கம் அவர்களே! மற்றும் ஓய்வு பெற்ற பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு.வே.பாலசுப்பிரமணியம் அவர்களே! அயற் பாடசாலை அதிபர்களே! ஆசிரியர்களே! மாணவர்களே! பெற்றோர்களே! பழைய மாணவர்களே! நலன்விரும்பிகளே! எல்லோருக்கும் எனது முதற்கண் வணக்கங்கள்.

இன்றைய நிகழ்வின் பெருமதிப்பிற்குரிய முதன்மை விருந்தினர் திரு.நடராசா தெய்வேந்திரராஜா அவர்கள் கல்வியில் சிறந்து விளங்கும் வடமாராட்சி பிரதேசத்தில் பிறந்து கல்வியில் முதல்நிலை பெற்று பேராதனைப் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானமாணிப் பட்டத்தை பெற்றுக் கொண்டார். பட்டப்பின் டிப்ளோமா பரீட்சையில் சிறப்புத் தேர்ச்சியும் கல்வி முகாமைத்துவத்தில் பட்டப்பின் படிப்பையும் பூர்த்தி செய்து இலங்கை கல்வி நிர்வாகப் பரீட்சையிலும் சித்தியடைந்து ஆற்றல்மிகு கல்விமானாகத் திகழ்ந்து வருகிறார். ஆசிரியராக பத்து வருடங்கள் சிறப்பான சேவை ஆற்றிய பின் ஏழு வருடங்கள் கேகாலை மாவட்டத்தில்

தெகியோவத்த கல்வி வலயத்தில் உதவிக் கல்விப்பணிப்பாளராகப் பணிபுரிந்து பின்னர் வடமராட்சியின் புகழ் பூத்த ஹாட்லிக் கல்லூரியில் அதிபராக பத்து வருடங்கள் பணியாற்றி பின்னர் வடமாகாண கல்வி அமைச்சின் உதவிச் செயலாளராக ஒரு வருடம் சேவையாற்றி யாழ் கல்வி வலயத்தின் கல்விப் பணிப்பாளராக பணியாற்றி வருகின்ற பெருமைக்குரிய பல்துறை தேர்ச்சி பெற்ற வலயக் கல்விப் பணிப்பாளர் அவர்கள் மிகுந்த உற்சாகத்துடன் மாணவர் கல்வியில் இடர்படும் இடர்களை இனங்கண்டு ஆசிரியர்களை சிறப்புற நடாத்தி வருவதால் இவ்வருட தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சையில் அகில இலங்கை ரீதியில் யாழ் வலயம் முதல் இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. இவற்றை விட க.பொ.த சாதாரண தரம், க.பொ.த உயர்தரம் பெறுபேறுகளும் உயர்நிலை அடைய முயற்சி செய்து வருவது பாராட்டுக்குரியதாகும். மென்மேலும் அவர் பணி சிறக்க வாழ்த்துகிறேன்.

இன்றைய நிகழ்வின் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டிருக்கும் வைத்திய கலாநிதி லயன் சிற்றம்பலம் இராஜலிங்கம் அவர்கள் இக்கிராமத்தைச் சேர்ந்தவர் மட்டுமன்றி அகில இலங்கை சமாதான நீதவானும் ஆவார். ஆரம்பக் கல்வியியையும் இடைநிலைக் கல்வியையும் அச்சுவேலி மத்திய கல்லூரியில் கற்று, உயர்தரக் கல்வியை யா/புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரியில் பெற்று தனது மருத்துவ கல்வியை கொழும்பு பல்கழலைக்கழகத்தில் மேற்கொண்டவர்.

பின்னர் வைத்தியராக தென்னிலங்கையின் பல பகுதிகளிலும் யாழ்ப்பாணத்தின் பல்வேறு இடங்களிலும் கடமையாற்றி, இறுதியாக அச்சுவேலி அரசினர் வைததியசாலையில் பணியாற்றி ஓய்வு பெற்றுக்கொண்டவர். தான் பணியாற்றிய காலங்களில் அவ்வவ் வைத்தியசாலைகளின் பௌதீக வள அபிவிருத்திப் பணிகளிலும் சிறப்பாக இருந்து செயற்பட்டவர். குறிப்பாக அச்சுவேலி அரசினர் வைததியசாலையைக் குறிப்பிடலாம்.

இதேபோல இக்கிராமத்து ஆலயமான போதிப்பிள்ளையார் ஆலயத்தின் தலைவராக இருந்தும் செயற்பட்டு வருகின்றார். இவை மட்டுமன்றி எமது பாடசாலைக்கான மின் இணைப்பைப் பெறுவதற்கும், கணனி ஒன்றை பெற்றுக் கொள்வதற்கும் முன் நின்று செயற்பட்டு இக்கிராமத்தின் மூத்த பிரசையும் சிரேஷ்ட கணக்காளருமான அமரர் வல்லிபுரம் சின்னத்துரையின் அனுசரணையுடன் இவற்றைப் பெற்றுத் தந்த பெருமனிதராவார்.

அதேபோல சிறப்பு விருந்தினர்களில் இன்னொருவராக கலந்து கொண்டிருக்கும் திரு.வேலுப்பிள்ளை பாலசுப்பிரமணியம் அவர்கள் ஆரம்பக் கல்வி முதல் அவரது சொந்தக் கிராமமான வரணி மகாவித்தியாலயத்தில் கல்வி கற்று பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகி யாழ் பல்கலைக்கழக்தில் கலைப்பட்டம் பெற்று மற்றும் டிப்ளோமா கற்றை நெறியையும் பூர்த்தி செய்து தேசிய கல்வி நிறுவகத்தில் பட்டப்பின் கல்வி முகாமைத்துவ டிப்ளோமா (PGDEM) கற்கை நெறியைப் பூர்த்தி செய்து பின்னர் யாழ் பல்கலைக்கழகத்தில் கல்வி முதுகலைமாணி கற்கை நெறியையும் பூர்த்தி செய்து கொண்டவர். தனது ஆசிரியப்

பணியில் கம்பஹா தாரிசலா மத்திய கல்லூரியில் முதல் நியமனம் பெற்று பின்னர் சேவைக்கால ஆசிரிய ஆலோசகராக கடமையாற்றி யா/கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாலயத்தில் அதிபராக முதல் நியமனம் பெற்று யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலத்திலும், யா/அச்சுவேலி மத்திய கல்லூரியிலும் அதிபராகப் பணியாற்றி, 2010 ஆம் ஆண்டில் கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளராக நியமனம் பெற்று, பின்னர் 2013 ஆம் ஆண்டு தென்மராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றி 20.12.2015 ஆம் திகதி ஓய்வு பெற்றவர். இவர் கோப்பாய்க் கோட்டக் கல்விப் பணிப்பாளராக இருந்த காலத்தில் எமது பாடசாலை மீது மிகுந்த கரிசனை கொண்டு செயற்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## பாடசாலையின் வரலாற்றுச் சுருக்கம்

இப்பிரதேசத்தில் ஒரு இந்து பாடசாலையை நிறுவ வேண்டும் என்ற உயர்ந்த நோக்கில் இந்து போர்ட் (Hindu Board) இராசரத்தினம் என்னும் பெரும் மனிதரால் 1957 ஆம் ஆண்டு யூலை மாதம் முதலாம் திகதி இப்பாடசாலை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இலங்கையின் கல்விப் பணிப்பாளர்களாக ஆங்கிலேயரே இருந்து வந்த காலத்தில் இந்நாட்டின் முதலாவது சுதேசிய கல்விப்பணிப்பாளராக நியமனம் பெற்ற கல்வியியலாளர் அருள் நந்தி அவர்களின் பெயரே எமது பாடசாலைக்கு சூட்டப்பட்டுள்ளது. அருள் நந்தி அவர்கள் வடமாராட்சிப் பகுதியில் புலோலி மற்றும் தோப்பு, உடுவில் கிராமத்துடனும் தொடர்புபட்ட ஒரு மனிதர். இதனால் இப்பிரதேசமும் எமது பாடசாலையும் பெருமையடைகின்றது.

1957 ஆம் ஆண்டு தோற்றம் பெற்ற பாடசாலையின் முதல் அதிபராக இருந்து பாடசாலைக்கு அரும்பெரும் பணியாற்றிய வளலாயைச் சேர்ந்த திரு.திருமேனி அவர்களும் பிற்காலத்தில் அதிபர் பதவியை வகித்த திருமதி.செல்லத்துரை இராசமணி, திரு.பூபாலசிங்கம், திரு.வை.சொக்கநாதன், திரு.செ.நடேசன், திரு.நா.நடனபாதம் போன்றோர் இப்பாடசாலையை மிகவும் சிறப்பாக வழிநடத்தி வந்துள்ளனர். இந்த வகையில் இவர்கள் யாவரும் பெரும் பாராட்டுக்குரியவர்களாக இப்பாடசாலைக்குச் சமூகத்தால் போற்றப்படுவதைக் காணக் கூடியதாகவு 4 இன்னும் சில

அதிபர்களின் பெயர்கள் சரியான தகவல் இன்மையால் இங்கு குறிப்பிடப்படவில்லை.

## மூன்றாவது பரிசுத்தினம்

1957ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலையில் பரிசுத்தினம் நடைபெற்றதாக எந்தவொரு தகவலையும் பெறமுடியவில்லை. அந்தவகையில் 2014ம் ஆண்டு முதலாவது பரிசுத்தினம் சிறப்பாக நடைபெற்றது. அதனடிப்படையில் இது மூன்றாவது பரிசுத்தினமாக அமைகிறது.

**"கற்றனைத்தூறும்அறிவு"** எனும் மகுட வாக்கியத்தைத் தாங்கியவாறு வீறு நடைபோடும் எமது பாடசாலை மாணவர்களின் அறிவை மையப்படுத்தியதாகவும் தான் பெற்ற அறிவினூடாக தனது சமூகத்திற்கும் தனது நாட்டிற்கும் பற்றுடன் சேவை செய்ய வேண்டும் என்ற உயர்ந்த நோக்கோடும் இப்பாடசாலையின் கல்விசார் பாரம்பரியம் கட்டியெழுப்பப்பட்டு வருகிறது.

2014 ஆம் ஆண்டு எமது பாடசாலையிலிருந்து பொதுப்பரீட்சையான புலமைப்பரிசில் பரீட்சையில் ஒரு மாணவன் சித்தியடைந்த போதும் 2015, 2016 ஆம் ஆண்டுகளில் சித்தி பெற முடியவில்லை. ஆனால் வெட்டுப்புள்ளிக்கு அண்மித்ததாக மாணவர்கள் புள்ளிகள் பெற்றது இங்கு குறிப்பிடத்தக்கது.

1995ஆம் ஆண்டுக்கு முன்னர் இப்பாடசாலையில் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 150 க்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்றதாக அறிகிறோம். ஆனால் இன்று மாணவர்

தொகை மிகவும் குறைவடைந்துள்ளது. அந்தவகையில் சிறிய பாடசாலைகள் எப்போதும் சவாலான பாடசாலையாகத்தான் இருக்குமோ என்ற ஐயம் எழுவது தவிர்க்க முடியாததே.

| தரம் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| 1 | 1 | 2 | 3 |
| 2 | 11 | 4 | 15 |
| 3 | 6 | 8 | 14 |
| 4 | 5 | 4 | 9 |
| 5 | 7 | 4 | 11 |
| மொத்தம் | 30 | 22 | 52 |

## பாடசாலையின் சமூகம்

எமது பாடசாலைச் சமூகம் மிகவும் அர்ப்பணிப்புள்ள சமூகமாகக் காணப்படுகிறது. இச்சமூகத்தினால் பாடசாலைக்குக் கிடைக்கப் பெற்ற உதவிகள் 2014 ஆம் ஆண்டு பரிசுத்தின அதிபர் அறிக்கையில் சிறப்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்தவகையில் இன்றும் இச்சமூகமும் பாடசாலையுடன் இணைந்து சிறப்பான முறையில் பல பணிகளை ஆற்றி வருகின்றது என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனினும் இதற்கு மேலாக பாடசாலை சமூகத்திற்கு ஒரு அன்பான கோரிக்கையையும் முன்வைக்கிறேன். இப்பிரதேசத்துக் கல்விமான்களாலும் அறிஞர்களாலும் உருவாக்கப்பட்ட இப்பாடசாலையின் மாணவர் தொகை

குறைவடைந்து சென்று கொண்டிருக்கின்றது. எதிர்காலங்களில் மாணவர் தொகை குறைந்த பாடசாலைகளை மூடுகின்ற நிலையும் ஏற்படலாம். அந்தவகையில் இப்பாடசாலையில் மாணவர் தொகையை அதிகரிப்பதற்கு சமூகம் கணிசமான பங்காற்ற வேண்டுமெனக்கூறுவதுடன் அம்மாணவர்களின் கல்வி மற்றும் ஆளுமை மிக்க செயற்பாடுகளுக்கு இப்பாடசாலை உறுதணையாக இருக்கும் என்பதனையும் கூறி வைக்க விரும்புகின்றேன்.

## கல்விச்செயற்பாடு

மனிதனுடைய வாழ்வில் நிரந்தரமானதும் நீடித்து நிலைக்கக்கூடியதும் கல்வி ஒன்றே ஆகும். இக்கல்வியானது சமூக விழுமியங்களைப் பாதுகாத்த வண்ணம் பண்புசார் ரீதியாக வளர்த்தெடுக்கப்பட வேண்டியதே இன்றைய மாறி வரும் உலகின் தேவையாக உள்ளது.

அந்தவகையில் **"இளமையிற் கல்வி சிலையில் எழுத்து"** என்பதற்கமைய ஆரம்பக்கல்வி மாணவர்களுக்கு சிறந்த கல்வியை வழங்கி வருவதோடு இப்பாடசாலையில் இருந்து அகன்று புதிய பாடசாலைக்குச் செல்லும் போது அங்கு ஏற்படும் புதிய மாற்றங்களை அனுசரித்து அதற்கமைய தன்னை உருவாக்கிக் கொள்வதற்கும் நல்ல மனப்பாங்குடன் தனது சமூகம், தேசம் என்பவற்றோடு சேர்ந்து வாழும் பக்குவத்தையும் உள்ளடக்கியதாகக் கலைத்திட்டத்தைச் சிறப்பான முறையில் அமுல்படுத்தி வருகின்றோம்.

அன்புள்ள மாணவர்களே உங்களின் கல்வியின் வளர்ச்சியும் உங்களது உயர்ச்சியும் நீங்கள் 8 | கற்ற பாடசாலையையும் ஆசிரியர்களையும் நேசிப்பதனூடாகவே சிறப்பாக அமையும் என்பதை கூறிக்கொள்வதோடு இந்த விடயத்தை அன்புள்ள பெற்றோர்களும் மனதில் இருத்தி செயற்படுத்த வேண்டும் என்பதையும் இவ்வேளையில் தெரியப்படுத்துவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

அன்புள்ள பெற்றோர்களே உங்கள் பிள்ளைகளின் எதிர்கால நல்வாழ்வுக்காக உழைக்க வேண்டியவர்களாக நீங்கள் உள்ளீர்கள். பிள்ளைகளின் கல்வித் தேவையை உணர்ந்து அப்பிள்ளைகளின் கல்வி நல்ல முறையில் அமைவதற்கு உங்களை அர்ப்பணித்துச் செயற்படுவதற்கு முன்வாருங்கள். பிள்ளைகளின் உள்ளங்களில் நல்ல மனப்பாங்குகளை வளர்த்தெடுக்க வேண்டியது உங்களது பெருங் கடமையாக உள்ளது. நல்ல மனப்பாங்குடன் கூடிய கல்வி அறிவினால் மட்டுமே ஒரு சமூகம் உயர்ந்த நிலையை அடைய முடியும். எனவே இவ்விடயம் தொடர்பாக நீங்கள் ஒவ்வொருவரும் அர்ப்பணிப்புடன் செயற்படுவீர்கள் என நம்புகிறேன்.

எமது பாடசாலையின் கல்விச் செயற்பாட்டில் 2014 ஆம் ஆண்டில் நடைபெற்றபுலமைப்பரிசில் பரீட்சையில் செல்வன் ற.றாகீசன் சித்தியடைந்து இருந்தான். தொடர்ந்து 2015 ஆம் ஆண்டு செல்வன் இ.சபேசன் 143 புள்ளிகளைப் பெற்றான். அவரால் வெட்டுப்புள்ளியை தாண்ட முடியவில்லை. அவர் வெட்டுப்புள்ளியைத் தாண்டுவதற்கு எட்டுப் புள்ளிகள் போதாது இருந்தது. ஆயினும் 92 வீதமான மாணவர்கள் 70 புள்ளிக்கு மேல் பெற்று பாடசாலைக்கு பெருமை

சேர்த்துள்ளனர். அந்தவகையில் தரம் ஐந்து வகுப்பின் வகுப்பாசிரியர் திருமதி.அமுதசுரபி நேமிநாதன் அவர்களை பாராட்டி வாழ்த்துகிறேன்.

அதேபோன்று 2016 ஆம் ஆண்டு அதாவது இந்த வருடமும் மாணவர்களால் வெட்டுப்புள்ளியை தாண்ட முடியாது போனது துரதிஷ்டவசமே. ஆயினும் செல்வி கு.கிர்ஷனா (126), செல்வி.இசுபேதா (126) செல்வன். வ.ஆதித்தியன் (118) செல்வன். ஜீ.துஸ்யந்தன் (109) செல்வன்.த.டிதுஜன் (100 புள்ளிகளைப் பெற்றுள்ளனர் 70 புள்ளிகளுக்கு மேல் 54 வீதமான மாணவர்கள் பெற்றுள்ளனர். அந்தவகையில் அந்த மாணவர்களையும் திருமதி.அமுதசுரபி நேமிநாதன் ஆசிரியர் அவர்களையும் பாராட்டி வாழ்த்துகிறேன். இவ்வாண்டு பெறுபேற்றின் வீழ்ச்சிக்கு 2014 ஆம் ஆண்டு எமது பாடசாலை எதிர்நோக்கிய ஆசிரியர் பற்றாக்குறையும் ஒரு காரணமாக அமைகிறது.

## ஆசிரியர் ஆளணி விபரம்

| | ஆண் | பெண் |
|---|---|---|
| அதிபர் | 01 | - |
| ஆசிரியர்கள் | - | 06 |
| மொத்தம் | 01 | 06 |

## ஆசிரியர் அகல்வும் இணைவும்

மேற்படி எமது பாடசாலையில் இருந்து 2015 ஆம் ஆண்டு திரு.செ.சிவநேசன் ஆசிரியர் அவர்கள் வன்னி இடமாற்றம் பெற்று கிளி/பூனகரி விநாசியோடை அமெரிக்கன்

மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலைக்கும் திருமதி.ச.கங்காதரன் அவர்கள் யா/கோப்பாய் மகாவித்தியாலயத்திற்கும் திருமதி.ச.ஜெயராஜன் அவர்கள் யா/நவற்கிரி அமெரிக்கன் மிஷன் தமிழ்கலவன் பாடசாலைக்கும் மாற்றலாகி சென்றுள்ளனர். இவ்வாசிரியர்கள் எமது பாடசாலைக்குச் செய்த சேவையை மனதார பாரட்டுகிறேன்.

இதேவேளை 2015 ஆம் ஆண்டில் திருமதி.ஜெயராணி யோகானந்தன், திருமதி. தவமணிதேவி சுப்பிரமணியம், செல்வி. செல்வரட்ணம் செல்வறூபா ஆகிய ஆசிரியர்கள் புதிய ஆசிரியர்களாக பாடசாலைக்கு இணைக்கப்பட்டுள்ளனர். அதுமட்டுமன்றி 2016 ஆம் ஆண்டு திருமதி. பிரசன்னா ஜெகந்தன் அவர்களும் புதிய ஆசிரியராக எமது பாடசாலைக்கு இணைக்கப்பட்டுள்ளார்.

அத்துடன் திருமதி.தவமணிதேவி சுப்பிரமணியம் அவர்கள் ஏற்கனவே 2003 ஆம் ஆண்டிலிருந்து 2008 ஆம் ஆண்டு வரை இப்பாடசாலையில் ஆசிரியராக கடமையாற்றிய பின்னர் திருகோணமலை சாம்பல் தீவு மகாவித்தியாலயத்திற்கு மாற்றலாகி சென்றிருந்தார் என்பதும் அதேவேளை திருமதி.பிரசன்னா ஜெகந்தன் அவர்கள் 2007 ஆம் ஆண்டிலிருந்து 2010 ஆம் ஆண்டு வரை தற்காலிக இணைப்பில் இப்பாடசாலையில் கடமையாற்றி இருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவ் ஆசிரியர்கள் அனைவரும் என்னுடன் இணைந்து சிறப்பான முறையில் கடமைப் பொறுப்புக்களை ஆற்றி வருவதை இட்டு அவர்களுக்கு எனது நன்றிகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

# இணைப்பாட விதான செயற்பாடுகள்

1. **விளையாட்டுப்போட்டி**

மாணவர்களுக்கான இல்ல மெய்வல்லுனர் திறனாய்வுகள் ஒவ்வொரு வருடமும் நடைபெற்று வருகின்றன. இலக்குமி, சரஸ்வதி என இரண்டு இல்லங்கள் பிரிக்கப்பட்டு அவ்வில்லங்களுக்கான போட்டியாக இது நடைபெறுகிறது. இவ்விளையாட்டுக்கு பொறுப்பாக திருமதி. ஜெ.பிரசன்னா ஆசிரியர் அவர்கள் செயற்பட்டு வருகிறார். இவ்வருடம் இவ்விளையாட்டுப் போட்டியினை நடத்த முடியாது போயிருந்தது இவ்விளையாட்டுப் போட்டியினை நடாத்துவதற்குரிய ஏற்பாட்டினை செய்த போதும் காலநிலை பாதகமாக அமைந்ததனால் இப்போட்டியினை நடாத்த முடியவில்லை. அதேவேளை செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வில் எமது மாணவர்கள் பங்கு பற்றியிருந்தமை குறிப்பித்தக்கது.

2. **கண்காட்சி**

பாடசாலையில் ஒவ்வொரு வருடமும் இரண்டாம் தவணை கண்காட்சி ஒன்றை நடாத்தி வருகிறோம். இந்நிகழ்விற்கு திருமதி.சுப்பிரமணியம் அவர்கள் பொறுப்பாக இருந்து செயற்பட்டு வருகிறார்.

3. **கல்விச்சுற்றுலா**

எமது மாணவர்கள் கல்விச்சுற்றுலாவின் மூலம் இலங்கையிலுள்ள வரலாற்றுப் பிரசித்தி பெற்ற இடங்களை தரிசித்து புதிய அனுபவங்கள்

பலவற்றைப் பெற்றுக் கொண்டனர். இது வருடா வருடம் நடைபெற்று வந்த பொழுதிலும் கடந்த இரண்டு ஆண்டுகளிலும் இச்செயற்பாட்டில் எங்களால் ஈடுபடமுடியவில்லை. இச்செயற்பாட்டுக்கு திருமதி. அ.நேமிநாதன் ஆசிரியை அவர்கள் பொறுப்பாக இருந்து வருகிறார்.

4. **குருளைச் சாரணர் அமைப்பு**

2010 ஆம் ஆண்டிலிருந்து எமது பாடசாலையில் குருளைச் சாரணர் அமைப்பு இயங்கி வருகிறது. இவ்வமைப்பானது பருத்தித்துறை மாவட்ட சாரணர்களுக்குரிய வேலை வாரப் போட்டியில் 2012 ஆம் ஆண்டும் 2013 ஆம் ஆண்டும் மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

5. **மாணவர் மன்றம்**

இப்பாடசாலையில் மாணவர் மன்றச் செயற்பாடுகள் இரண்டு வாரங்களுக்கு ஒரு தடைவ புதன்கிழமைகளில் நடைபெற்று வருகிறது. இவ்வமைப்புக்கு திருமதி.ஜெ.யோகானந்தன் ஆசிரியை அவர்கள் பொறுப்பாக இருந்து செயற்பட்டு வருகிறார்.

6. **இந்துமாமன்றம்**

இப்பாடசாலையில் இந்துமாமன்றம் வருடா வருடம் நவராத்திரி பூசை, சைவ பரிபாலன சபை பரீட்டை என்வற்றை நடாத்தி வருவதோடு மாணவர்களின் சமயம் சார்ந்த விழுமியப் பண்புகளை சிறப்பான முறையில் பேணுவதற்கு அனுசரணையாக இருந்து வருகிறது.

## பாடசாலையின் உட்கட்டமைப்புக்கள்

எமது பாடசாலையில் பல்வேறு அமைப்புக்கள் செயற்பட்டு வருகின்றன. ஒரு ஆசிரியர் பல அமைப்புக்களுக்குப் பொறுப்பாக இருந்து செயற்பட்டு வருகின்றார். ஆயினும் சில அமைப்புக்களை மட்டும் குறிப்பிடுகிறேன்.

1. **பாடசாலை அபிவிருத்திக்குழு**

   இவ்வமைப்பின் தலைவராக பதவி வழியாக அதிபர் அவர்களும் பொருளாளராக திருமதி.அ.நேமிநாதன் ஆசிரியர் அவர்களும், செயலாளராக திருமதி.ஜெ.யசோதா (பெற்றார்) அவர்களும் இருந்து செயற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. பாடசாலையின் அபிவிருத்தி பணிகளில் இவ்வமைப்பு காத்திரமான பங்கு வகிக்கின்றது.

2. **கட்டாயக் கல்வி வரவுக்குழு**

   இவ்வமைப்பின் பொறுப்பாசிரியராக திருமதி.ஜெ.பிரசன்னா அவர்கள் இருந்து செயற்பட்டு வருகிறார். ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் என்ற வகையில் கட்டயாக்கல்வி வரவுக்குழு அமைக்கப்பட்டுள்ளது. இவ்வமைப்பானது ஒவ்வொரு மாதமும் கூடுகின்றது. 16 வயதிற்கு உட்பட்ட மாணவர்கள் அனைவரும் பாடசாலைக் கல்வியை ஒழுங்காக கற்பதற்கான நடவடிக்கைகளை எடுத்து

வருகின்றது. இவ்வமைப்பானது எமது பாடசாலை மாணவர்கள் மட்டுமன்றி இப்பகுதியிலுள்ள அனைத்து மாணவர்கள் மீதும் கரிசணையோடு செயற்பட்டு வருகின்றது.

3. **சுகாதார மேம்பாட்டுக்குழு**

இவ்வமைப்பின் பொறுப்பாசிரியராக திருமதி. அ.நேமிநாதன் அவர்கள் செயற்பட்டு வருகிறார். இக்குழுவில் ஆசிரியர்கள், பெற்றோாகள், சுகாதார பரிசோதகர் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர். இவற்றைவிட மாணவர் சுகாதார கழகம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

4. **உலக உணவுத்திட்டம்**

இச்செயற்பாட்டிற்கு செல்வி.செ.செல்வரூபா அவர்கள் பொறுப்பாக இருந்து செயற்பட்டு வருகிறார். மாணவர்களுக்காக தரமான உணவு வழங்கப்படுகிறது. அனைத்து மாணவாகளும் விருப்பத்தோடு உணவை உட்கொள்கின்றனர்.

5. **தரவட்டம்**

எமது பாடசாலையில் பல்வெறு விடயங்கள் பல்வேறு தலைப்புகளில் ஆராயப்பட்டு தரவட்டத்தில் முடிவெடுக்கப்படுகிறது. அந்தவைகயில இத் தரவட்டத்திற்கு பொறுப்பாக செல்வி.செ.செல்வரூபா ஆசிரியை அவர்கள் செயற்பட்டு வருகிறார்.

6. **வழிகாட்டலும் ஆலோசனைகளும்**

எமது பாடசாலை மாணவர்களுக்கு வழிகாட்டலும் ஆலோசனையும் மிகவும் முக்கியமானதாக காணப்படுகிறது. அந்தவகையில் இவ்வழிகாட்டலும் ஆலேசனைக்கு பொறுப்பாசிரியராக

திருமதி.ஜெயராணி யோகானந்தம் அவர்கள் செயற்பட்டு வருகிறார்.

7. **இணைப்பாட விதான செயற்பாடுகள்**

எமது பாடசாலை மாணவர்கள் சகல இணைப்பாட விதான செயற்பாடுகளிலும் பங்குபற்றி வருகின்றனர். அதுமட்டுமன்றி பாடசாலையும் இணைப்பாட விதான செய்றபாட்டிற்கு மிகவும் முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. இச்செயற்பாட்டுக்கு திருமதி. பிரசன்னா ஜெகந்தன் அவர்கள் பொறுப்பாசிரியராக இருந்து செயற்பட்டு வருகிறார்.

## நினைவழியா உதவிகள்

1. இவ்வருடம் எமது பாடசாலைக்கு வடமாகாண கல்விப்பணிமனையினூடாக ஒரு போட்டோ பிரதி இயந்திரம் கிடைக்கப்பெற்றுள்ளது.
2. இது மட்டுமன்றி பாடசாலை அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலைத் திட்டத்தின் கீழ் மாணவர்களுக்கான மலசலகூட வேலைத்திட்டத்திற்காக ரூபா 0.696 மில்லியனும், சிறுதிருத்த வேலைக்கென 0.28 மில்லியனும் ஒதுக்கப்பட்டுள்ளன.

இவ் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு உறுதுணையாக இருந்த மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கும் மற்றும் இன்றைய நிகழ்வின் பிரதம விருந்தினராக இங்கே கலந்து கொண்டிருக்கும் வலயக் கல்விப் பணிப்பாளருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## பாடசாலைத் தேவைகள்

1. எமது பாடசாலையின் மாணவர் தொகையைத் தக்கவைப்பதற்கு ஆங்கிலக் கல்வி மிக முக்கியமாக அமைகின்றது. அந்தவகையில் இன்று அவ்வவ் வகுப்பாசிரியர்களே ஆங்கிலக் கல்வியையும் புகட்டி வருகின்றனர். ஆயினும் ஒரு ஆங்கில ஆசிரியரை நியமிப்பதனூடாக ஆங்கில பாடத்தினை மேலும் வினைத்திறன் மிக்கதாக்கலாம் என்ற நம்பிக்கை எமக்குண்டு. அந்தவகையில் ஒரு ஆங்கில ஆசிரியரின் தேவையை எதிர்பார்த்து நிற்கின்றோம்.
2. அழகியல் பாடத்திற்கென ஆரம்பக் கல்விக்கு ஆசிரிய ஆளணி வகுதி ஒதுக்கப்படவில்லை. ஆயினும் எம்மைப் போன்ற சிறிய பாடசாலைகளும் அப்பாடசாலை சூழலிலிருந்து கல்வி பயிலும் மாணவர்களுக்கும் இவ்வாறான செயற்பாடினூடாக உளவிருத்தியை ஏற்படுத்த வேண்டிய பெரியளவிலான தேவை இருக்கிறது. எனவே பின் தங்கிய நிலையிலுள்ள சிறிய பாடசாலைகளுக்கு இவ்வாறான அழகியல் பாடத்தில் அனுபவம் மிக்க ஆசிரியர்களை ஆசிரிய வகுதிக்குள் உள்வாங்கி நியமிப்பதனூடாக இம்மாணவர்களின் ஆளுமை விருத்தியை மேலும் அதிகரிக்க முடியும் என இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.
3. பாடசாலை சமூகத்திற்கும் ஒரு அன்பான வேண்டுகோள். ஆரம்பக் கல்வி மாணவர்களுக்கு ஆரம்பக் கல்வியிலிருந்தே சிங்கள மொழியைப் புகட்டுவது சிறப்பானதாகும். அதற்கு தாங்கள் ஒத்தாசை வழங்கும்

சந்தர்ப்பத்தில் சிங்கள மொழியை மாணவர்களுக்கு சிறப்பான முறையில் புகட்ட முடியும் என்ற நம்பிக்கை உள்ளது. இதற்கான ஆசிரிய நியமனம் அதற்கான ஊதியம் இவற்றுக்கு நீங்களே பொறுப்பாக இருந்து செயற்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கின்றேன்.

## பாடசாலையின் பௌதீக வளத்தேவைகள்

எமது பாடசாலைக்கு சொந்தமான நாலு ஏக்கர் காணி உள்ளது என்பதை குறிப்பிட விரும்புகிறேன். அந்தவகையில் பாடசாலை மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை சிறப்பாக மேற்கொள்வதற்கு பல பௌதீக வளத்தேவைகளை நிறைவு செய்ய வேண்டியுள்ளது.

அந்தவகையில் மூன்று பிரிக்கப்பட்ட வகுப்பறைகள் தேவைப்படுவதுடன் இவ்வாறான பரிசுத்தினங்களின் போது இந்த நிகழ்வை இன்னும் சிறப்பாகச் செய்வதற்கு எமது பாடசாலையின் மண்டபத்திற்கு வெளியே ஒரு அரங்கு அமையுமாயின் மிகவும் சிறப்பாக இருக்கும். இவ்விடயம் தொடர்பான இவ்வாண்டுக்கான சிறு திருத்த வேலைக்கென பாடசாலைக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் இப்படியான வேலைத்திட்டம் ஒன்றை செய்து தரும்படி எமது பிரதம விருந்தினர் அவர்களுக்கு ஏற்கனவே எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றையும் விடுத்துள்ளேன் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இவற்றைவிட பல பௌதீக வளத்தேவைகள் பட்டியலிடப்பட்டு Master Plan இனூடாக வலயக் கல்விப் பணிமனைக்கு ஏற்கனவே அனுப்பி வைத்துள்ளேன். அதில் ஒரு பிரதி இங்கும் இணைக்கப்பட்டுள்ளது.

# J/Thoppu Arulnanthy Vidyalayam Infrastructure Needs

| No | Type of Resource | Priority | Require No | Total lenth |
|---|---|---|---|---|
| 01 | Class room | $n_1$ | 03 | 60' x 25' |
| 02 | Toilet (staff) | $n_2$ | 01 | ..... |
| 03 | Library | $n_3$ | 01 | 40' x 25' |
| 04 | Activity | $n_4$ | 01 | 25' x 25' |
| 05 | room | $n_5$ | 01 | 40' x 25' |
| 06 | Aesthetic room | $n_6$ | 01 | .... |
| 07 | counseling room | $n_7$ | 01 | .... |
| 08 | Computer unit | $n_8$ | 01 | 20' x 25' |
| 09 | Principal quarters | $n_9$ | 01 | .... |
| 10 | Assembly Hall | $n_{10}$ | 01 | .... |
| 11 | Foundation and Net fence | $n_{11}$ | - | 1561' |

## கற்றல் கற்பித்தல் சாதனங்கள்

1. மாணவர்களின் கல்வி வளர்ச்சியை மேலும் மேம்படுத்துவதற்காக நவீன கற்றல் கற்பித்தல் சாதனங்களான,

   i. Multimedia Projector

   ii. ஒலிபெருக்கி

   என்பன தேவையாகவுள்ளன. இத்தேவைகள் கிடைப்பதற்கு பாடசாலை சமூகமோ, அல்லது வலயக் கல்விப் பணிமனையோ ஆவன செய்ய வேண்டுமென கேட்டுக் கொள்கின்றேன்.

2. தரம் 03, 04, 05 மாணவர்கள் வகை II தளபாடங்களில் இருந்து கல்வி கற்பதே மிகவும் பொருத்தப்பாடானது ஆகும். எனினும் எமது பாடசாலையில் வகை I தளபாடங்களையே இம்மாணவர்கள் பயன்படுத்தி வருகின்றனர். அந்தவகையில் 45 எண்ணிக்கை கொண்ட வகை II தளபாடங்களைத் தந்துதவுமாறு கல்வி அதிகாரிகளிடம் பணிவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

## 2015 ஆம் ஆண்டு பாட ரீதியாகப் பரிசு பெறுவோர் விபரம்

தரம் - 01

| பெயர் | தமிழ் | கணிதம் | சுற்றாடல் | சமயம் | ஆங்கிலம் | பொதுத் திறமை |
|---|---|---|---|---|---|---|
| சி.ரதீசன் | 1ம் இடம் | 1ம் இடம் | 1ம் இடம் | 1ம் இடம் | - | * |
| சு.அந்தோனிதாஸ் | 1ம் இடம் | - | 2ம் இடம் | - | - | - |
| ம.எக்சிபா | - | 1ம் இடம் | - | 2ம் இடம் | - | - |
| ரா.புவிராஜ் | 1ம் இடம் | - | - | 2ம் இடம் | - | - |
| இ.மேனதா | | 1ம் இடம் | 2ம் இடம் | - | - | - |

தரம் - 02

| பெயர் | தமிழ் | கணிதம் | சுற்றாடல் | சமயம் | ஆங்கிலம் | பொதுத் திறமை |
|---|---|---|---|---|---|---|
| லோ.அஸ்மினியா | 1ம் இடம் | 2ம் இடம் | 1ம் இடம் | 1ம் இடம் | 1ம் இடம் | * |
| றே.யதுர்சனா | 2ம் இடம் | 3ம் இடம் | 2ம் இடம் | 2ம் இடம் | 2ம் இடம் | - |
| அ.ஜான்சிகா | 3ம் இடம் | - | - | - | 3ம் இடம் | - |
| ஜெ.பிறேம்நாத் | - | 1ம் இடம் | 3ம் இடம் | - | 3ம் இடம் | - |
| கு.கியானுஷன் | - | 2ம் இடம் | - | - | - | - |

தரம் - 03

| பெயர் | தமிழ் | கணிதம் | சுற்றாடல் | சமயம் | ஆங்கிலம் | பொதுத் திறமை |
|---|---|---|---|---|---|---|
| பி.டிலக்சன் | 1ம் இடம் | 1ம் இடம் | 1ம் இடம் | 1ம் இடம் | 2ம் இடம் | * |
| இ.துஜித்தா | 2ம் இடம் | 2ம் இடம் | 2ம் இடம் | 2ம் இடம் | 1ம் இடம் | - |
| ச.சதுர்சன் | 3ம் இடம் | 3ம் இடம் | - | - | - | - |
| இ.நிருத்திகா | - | - | - | 3ம் இடம் | 3ம் இடம் | - |

தரம் - 04

| பெயர் | தமிழ் | கணிதம் | சுற்றாடல் | சமயம் | ஆங்கிலம் | பொதுத் திறமை |
|---|---|---|---|---|---|---|
| க.கிருசனா | 2ம் இடம் | 1ம் இடம் | 2ம் இடம் | 2ம் இடம் | 1ம் இடம் | * |
| இ.சுவேதா | 3ம் இடம் | 2ம் இடம் | 1ம் இடம் | 3ம் இடம் | 2ம் இடம் | - |
| வ.ஆதித்தியன் | 1ம் இடம் | 3ம் இடம் | 3ம் இடம் | 1ம் இடம் | - | - |
| இ.வனோஜிகா | - | - | - | - | 3ம் இடம் | - |

தரம் - 05

| பெயர் | தமிழ் | கணிதம் | சுற்றாடல் | சமயம் | ஆங்கிலம் | பொதுத் திறமை |
|---|---|---|---|---|---|---|
| நா.சபேசன் | 1ம் இடம் | 1ம் இடம் | 1ம் இடம் | 2ம் இடம் | 1ம் இடம் | * |
| மு.தனு | - | 2ம் இடம் | 3ம் இடம் | 3ம் இடம் | 3ம் இடம் | - |
| ம.நிதர்சன் | 2ம் இடம் | 3ம் இடம் | 2ம் இடம் | - | - | - |
| பி.டிலானி | - | 3ம் இடம் | - | - | 2ம் இடம் | - |
| ச.தர்மிதா | 3ம் இடம் | - | - | 1ம் இடம் | - | - |

# விஜயதசமி விழா போட்டிகள்

| பெயர் | தரம் | கோலம் | மாலை கட்டுதல் | பஞ்சபுராணம் | தோரணம் |
|---|---|---|---|---|---|
| பி.தர்சிகா | 1 | 1ம் இடம் | | | |
| ச.தனுசன் | 1 | 2ம் இடம் | | | |
| ஜெ.ஜெனிஸ்ரா | 1 | 3ம் இடம் | - | - | - |
| இ.மேனதா | 2 | 1ம் இடம் | | | |
| ரா.புவிராஜ் | 2 | 2ம் இடம் | | | |
| ஜெ.ஜெஸ்மி | 2 | 3ம் இடம் | 3ம் இடம் | | |
| க.கபிசன் | 2 | | 1ம் இடம் | | |
| ர.அபினதாஸ் | 2 | | 2ம் இடம் | | |
| அ.விதுசன் | 2 | | | 1ம் இடம் | - |
| ஜெ.பிரியதர்சிகா | 2 | | | 2ம் இடம் | |
| இ.விதுசனா | 2 | | | 3ம் இடம் | |
| லோ.அஸ்மினியா | 3 | 1ம் இடம் | 1ம் இடம் | 3ம் இடம் | 2ம் இடம் |
| மு.தனுசியா | 3 | 2ம் இடம் | | 2ம் இடம் | |
| அ.ஜான்சிகா | 3 | 3ம் இடம் | | 1ம் இடம் | 3ம் இடம் |
| ஜெ.பிறேம்நாத் | 3 | | | | 1ம் இடம் |
| ர.கஜீனா | 3 | | 2ம் இடம் | | |
| கு.கியானுசன் | 3 | | 3ம் இடம் | | |
| ஜெ.மதுசாயினி | 4 | 1ம் இடம் | | | |
| பி.டிலக்ஷன் | 4 | 2ம் இடம் | | | 1ம் இடம் |
| நி.துஜித்தா | 4 | 3ம் இடம் | 3ம் இடம் | | 2ம் இடம் |
| இ.நிருத்திகா | 4 | | 1ம் இடம் | | |
| கி.கிருஸ்ணருபன் | 4 | | 2ம் இடம் | | |
| பி.டிலக்ஷன் | 4 | | | 1ம் இடம் | |
| கு.கிர்சனா | 5 | 1ம் இடம் | 1ம் இடம் | 1ம் இடம் | 1ம் இடம் |
| இ.சுவேதா | 5 | 2ம் இடம் | | 2ம் இடம் | |
| வ.ஆதித்தியன் | 5 | 3ம் இடம் | 2ம் இடம் | | 3ம் இடம் |
| த.டிதுஜன் | 5 | | | | 2ம் இடம் |
| ர.டிலக்ஷனா | 5 | | 3ம் இடம் | | 3ம் இடம் |
| இ.வனோஜிகா | 5 | | | 3ம் இடம் | |

## சிறுவர் தினப் போட்டிகள்

| பெயர் | தரம் | பட்டப் போட்டி | பலூன் உடைத்தல் | சித்திரப் போட்டி | கட்டுரை | கவிதை |
|---|---|---|---|---|---|---|
| ஈ.தனுசன் | 1 | 1ம் இடம் | 1ம் இடம் | 2ம் இடம் | | |
| பி.தர்சிா | 1 | | 2ம் இடம் | 1ம் இடம் | | |
| நி.சுதர்சன் | 2 | 1ம் இடம் | 3ம் இடம் | | | |
| ர.அபினதாப் | 2 | 2ம் இடம் | 2ம் இடம் | | | |
| சி.ரதீசன் | 2 | 3ம் இடம் | | | | |
| இ.மேனதா | 2 | | 1ம் இடம் | | | |
| அ.ஜீவிதன் | 2 | | | 1ம் இடம் | | |
| சு.அந்தோனிதாஸ் | 2 | | | 2ம் இடம் | | |
| ரா.விதுசனா | 2 | | | 3ம் இடம் | | |
| அ.ஜான்சிகா | 3 | 1ம் இடம் | | | 1ம் இடம் | 2ம் இடம் |
| ஜெ.அனுஸ்ரன் | 3 | 2ம் இடம் | | 2ம் இடம் | 2ம் இடம் | 1ம் இடம் |
| இ.விதுர்சன் | 3 | 3ம் இடம் | 1ம் இடம் | | | |
| மு.தனுசியா | 3 | 3ம் இடம் | | 3ம் இடம் | | |
| ர.கஜீனா | 3 | | 2ம் இடம் | | | |
| பா.ரஜீந்தினி | 3 | | 3ம் இடம் | | | |
| கி.கியானுசன் | 3 | | | 1ம் இடம் | | |
| ஜெ.பவிஷா | 3 | | | | 3ம் இடம் | |
| ஜெ.பிறேம்நாத் | 3 | | | | | 3ம் இடம் |
| ச.சதுர்சன் | 4 | 1ம் இடம் | 1ம் இடம் | 3ம் இடம் | | |
| பி.டிலக்சன் | 4 | 2ம் இடம் | 2ம் இடம் | | 2ம் இடம் | 2ம் இடம் |
| ம.லக்சன் | 4 | | 3ம் இடம் | | | |
| கி.கிருஷ்ணரூபன் | 4 | 3ம் இடம் | | | | |
| இ.நிருத்திகா | 4 | | | 1ம் இடம் | | 3ம் இடம் |
| ஜெ.மதுசாயினி | 4 | | | 2ம் இடம் | 3ம் இடம் | |
| நி.துஜித்தா | 4 | | | | 1ம் இடம் | 1ம் இடம் |
| ஜீ.துஸ்யந்தன் | 5 | 1ம் இடம் | 1ம் இடம் | | | |
| வ.ஆதித்தியன் | 5 | 2ம் இடம் | 2ம் இடம் | 3ம் இடம் | 2ம் இடம் | 2ம் இடம் |
| ரா.விதுசன் | 5 | 3ம் இடம் | 3ம் இடம் | | | |
| இ.சுவேதா | 5 | | | 1ம் இடம் | 1ம் இடம் | |
| கு.கிர்சனா | 5 | | | 2ம் இடம் | 3ம் இடம் | 1ம் இடம் |
| ர.டிலக்சனா | 5 | | 2ம் இடம் | | | |
| த.டிதுஜன் | 5 | | | | | 3ம் இடம் |

## விசேட பரிசில்கள்

1. **தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை – 2016**

| | |
|---|---|
| கு.கிர்சனா | (126) |
| இ.சுபேதா | (126) |
| வ.ஆதித்தியன் | (118) |
| ஜீ.துஸ்யந்தன் | (109) |
| த.டிதுஜன் | (100) |

2. **கோட்டமட்ட சதுரங்கப் போட்டி**

| | |
|---|---|
| பி.டிலக்ஷின் | (தரம் - 04) |
| நி.துஜித்தா | (தரம் - 04) |

# பாடசாலைக்கீதம்

தோழமைப் பதியூராம் தோப்பூர் தனில் விளங்கி
வாழ வைக்கும் எங்கள் அருள்நந்தித் தாயே
சீர் நிறை கலைகள் செழிப்புறவே ஊட்டிப்
பாரது புகழ்ந்திட வாழிய பல்லாண்டு

கற்றனைத்தூறு மறிவுட னென்றென்றும்
சொற்பொருள் புதிதாய்ச் சுடர்மிகு மறிவுடன்
பெற்றென வெமக்குத் தேனென வூட்டும்
அற்புதக் கலைக்கூடம் அகிலத்திற் சிறந்தது

அன்புடன் ஆளும் அதிபர் ஆசான்கள்
அதிகாரிகள் சேர் கூட்டுறவிற் செழித்து
சாதனை நாட்டிச் சரித்திரம் படைத்து
வாழ்க! வாழ்க! வாழிய பல்லாண்டு

**தாளம் :- ஆதி**
**இராகம் :- கிந்தோளம் / கம்சத்வனி**